**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 192/2022 PW1**

13.08.2025 **வா.சா.1 கோவிந்தன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

அய்யாசாமிக்கு எதிராக நான் வழக்கு போட்டுள்ளேன். பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக வழக்கு போட்டுள்ளேனா என்று கேட்டால் கிரைய ஒப்பந்தம் போட்டதன் பேரில் வழக்கு போட்டுள்ளேன். 29.08.2019ந் தேதி கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. வழக்கு சொத்தின் சர்வே எண் நியாபகம் இல்லை. விஸ்தீரணம் 1 ஏக்கர் 7 செண்ட் ஆகும். மேற்படி சொத்திற்கு செண்ட் கணக்கில் விலை நிர்ணயம் செய்யப்பட்டதா ஏக்கர் கணக்கில் விலை நிர்ணயம் செய்யப்பட்டதா என்று கேட்டால் ஏக்கர் கணக்கில் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. கிரையத் தொகையாக ரூ. 10,25,000/- விலை பேசப்பட்டு ரூ. 9,75,000 முன்பணமாக கொடுக்கப்பட்டது. நான் துூபாயில் எலக்ரீஷியன் வேலை செய்து கிடைத்த வருவாயின் மூலமாகவும், என் வீட்டில் பால் வியாபாரம் செய்து வந்த வருமாணத்தின் மூலமாகவும் முன் தொகை கொடுத்தேன். மேற்கண்டவாறு எனக்கு பணம் கிடைத்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கிரைய ஒப்பந்தம் பதிவு செய்ய பதிவு அலுவலகத்திற்கு எந்த நேரத்தில் சென்றேன் என்றால் நேரம் சரியாக தற்போது நியாபகம் இல்லை ஆனால் காலை முதல் மதியம் வரை அங்கு இருந்தோம். நான், ரங்கநாதன், தமிழ் ஆகிய மூவரும் பதிவாளர் அலுவலகம் சென்றோம். மீதித் தொகையை எந்த தேதியில் (கால அவகாசம்) செலுத்துவதாக பத்திரத்தில் எழுதிக் கொண்டோமா என்று கேட்டால் இல்லை. சொத்தை அக்ரிமெண்ட் போட்ட பிறகு கிரைய பத்திரம் எழுதித் தரச் சொல்லி 1ம் பிரதிவாதியை கேட்டேனா என்றால் பிரதிவாதி ஊரிலேயே இல்லை. அவர் எங்கு போய் இருந்தார் என்று எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு போடுவதற்கு முன்பே 05.02.2022ல் எனக்கு பிரதிவாதிகள் சட்ட அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் ஆம் அனுப்பினார்கள். நான் அந்த அறிவிப்பை 07.02.2022ந் தேதி பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிகள் அனுப்பிய நோட்டீசுக்கு பிறகாவது 1ம் பிரதிவாதியை அனுகி நான் கேட்டேனா என்றால் 1ம் பிரதிவாதி ஊரிலேயே இல்லை. யாரிடமாவது நான் விசாரித்தேனா என்றால் அவர் ஊரில் இல்லாததாலும், அவர் போன் நெம்பரை மாற்றி விட்டதாலும் நான் யாரிடமும் விசாரிக்கவில்லை. என்னுடைய நிருபண வாக்குமூலத்தின் பத்தி 5ல் சொல்லியுள்ளபடி என்று பிரதிவாதிகளை சந்தித்து நான் நேரில் கேட்டேன் என்று கேட்டால் 4 வருடங்கள்

ஆகிவிட்டதால் தற்போது நியாபகம் இல்லை. யார் மூலமாக பிரதிவாதிகளுக்கு நான் தகவல் கொடுத்தேன் என்றால் என்னுடைய வழக்கறிஞர் நோட்டீஸ் மூலம் தகவல் கொடுத்தேன். 21.07.2022ந் தேதி கொடுத்துள்ளேன். மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் 03.08.2022ந் தேதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பிற்கு பிறகாவது 1ம் பிரதிவாதியை சந்தித்தேனா என்றால் இல்லை. அக்ரிமெண்ட் மொத்தம் 82 செண்டிற்கு போடப்பட்டது. 1ம் பிரதிவாதி அவரின் அவசர தேவைக்காக கடன் தான் வாங்கினார் என்றால் சரியல்ல. மேற்படிகடனுக்கு பொருப்புறுதிக்காகத்தான் மேற்படி வா.சா.ஆ.1, 1ம் பிரதிவாதியால் எனக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்டுள்ளது போல ரூ. 9,75,000/- 1ம் பிரதிவாதி என்னிடம் பெறவில்லை என்றும் ரூ. 6 லட்சம் மட்டுமே 1ம் பிரதிவாதி என்னிடம் கடனாக பெற்றார் என்றால் சரியல்ல. மேற்படி ரூ. 6 லட்சத்தை திருப்பி தருவதற்கு ஏதுவாகத்தான் 28.08.2022ல் 3 வருட காலகெடு நிர்ணயிக்கப்பட்டு வா.சா.ஆ.1 ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. அதன் பிறகு 1ம் பிரதிவாதி மேற்படி ரூ. 6 லட்சத்திற்கு முறையாக வட்டி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. நான் வட்டியை வாங்கிக் கொண்டு 1ம் பிரதிவாதிக்கு ரசீது கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த ரூ. 6 லட்சத்தை மொத்தமாக பைசல் செய்து விடுகிறேன் என்று சொல்லித்தான் 05.02.2022 தேதியிட்ட நோட்டீசை பிரதிவாதிகள் எனக்கு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. 07.02.2022ல் பிரதிவாதிகள் அனுப்பிய நோட்டீசை நான் பெற்றுக் கொண்டு வேண்டுமென்றே எவ்வித பதிலையும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி பெயர் ராஜலட்சுமி. ராஜலட்சுமி 1ம் பிரதிவாதிக்கு எதிராக தண்டராம்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை 1ம் பிரதிவாதியின் மீது பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை என்று சொன்னால் அவர் மற்றும் 6 பேர் மீது பதிவு செய்யப்பட்டது. கோவிந்தன், பெரியசாமி, பாபு, ஜெயந்தி, ரேவதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் ஆவார்கள். அந்த முதல் தகவல் அறிக்கை எண் 19/2022 என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி முதல் தகவல் அறிக்கையில் என் மனைவி ராஜலட்சுமி 3 வருடத்திற்குள் வட்டியும், அசலும் கொடுத்தால் மட்டுமே நிலத்தை 1ம் பிரதிவாதியிடம் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்திருந்தோம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மீதி பாக்கித் தொகையான ரூ. 50 ஆயிரத்தை இதுநாள் வரை 1ம் பிரதிவாதிக்கு செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை எனென்றால் வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்ட பிறகு தற்போது தான் 1ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் பார்க்கிறேன். நீதிமன்றத்திலாவது

பாக்கி கிரையத் தொகையை வைப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி எந்த காலத்திலும் எனக்கு விற்பதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை கிரையம் பெற நான் எக்காலத்திலும் விருப்பியதில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் தற்போதைய சந்தை விலை ரூ. 20 லட்சம் பெறும் என்றால் சரியல்ல. விலை அதிகமாக உள்ள வழக்கு சொத்தை நான் சொன்னது போல் வெறும் ரூ. 10,25,000/- பிரதிவாதி எனக்கு விற்பதாக சொல்லி கிரைய ஒப்பந்தம் போடவேண்டிய அவசியமே இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னிடம் கடனாக வாங்கிய ரூ. 6 லட்சத்திற்கு ஏற்கனவே செலுத்திய வட்டி போக மீதமுள்ள வட்டியை முதலுடன் சேர்த்து செலுத்துவதற்கு 1ம் பிரதிவாதி தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கலைவாணி 1ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.